சொத்துவரி திருத்தம்-2018

ந.க.எண்.2359/2018/அ2

நாள்: 10.09.2018

அரசாணை (நிலை) எண்: 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 19-07-2018 மற்றும் அரசாணை (நிலை) எண்: 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 26-07-2018ன் படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 அட்டவணை 4ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் தேவகோட்டை நகராட்சி சொத்துவரியினை 01-04-2018 முதல் பொது சீராய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு சொத்து உரிமையாளர்/குடியிருப்போர்/குத்தகைதாரர் சமர்ப்பிக்கும் சொத்துவரி சுய மதிப்பீடு விவர அறிக்கையில் உள்ள விபரங்களை அடிப்படையாகக் கொண்டு இருக்கும். இந்நகர் மன்ற தீர்மான எண்: 548 நாள்: 20-08-2018 ன் படி கீழ்கண்டுள்ளவாறு மண்டல அடிப்படை மதிப்பு (Zonal Value) 01-04-2018 முதல் உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக தெருக்கள் பிரிக்கப்பட்டு விவரங்கள் தேவகோட்டை நகராட்சி இணையதள முகவரி (http//123.63.242.116//devakottai/) மற்றும் தேவகோட்டை நகராட்சி அறிவிப்புப் பலகையில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்விவரங்கள் நேரடியாக மேற்படி இணையதளத்தின் வாயிலாகவும், அலுவலக நேரத்தில் நகராட்சி அலுவலகத்தில் பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

மண்டலம்	சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு	
	தற்போதைய மதிப்பு	உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு
A	ரூ.0.90	ரூ.1.40
B	ரூ.0.80	ரூ.1.20
C	ரூ.0.70	ரூ.1.10

மேலும், இதுகுறித்து ஆட்சேபனைகள் எதும் இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிட்ட **30 தினங்களுக்குள்** எழுத்து பூர்வமாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தேவகோட்டை நகராட்சி ஆணையருக்கு அனுப்பலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இடம்: தேவகோட்டை

ஆணையாளர் (பொ)